

‘தி.மு.கழகத்தின் பீமசேனன் வை.பெருமாள்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட தொ.மு.ச. பேரவை முன்னாள் பொதுச்செயலாளர் வை.பெருமாள் அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாளினை முன்னிட்டு தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான கலைஞரகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன், அமைப்புச் செயலாளர் வி.வேலுசுவாமி, இணைப்பொதுச்செயலாளர் ஜெ.விஜயகுமார், அலுவலகச் செயலாளர்கள் ஆ.சீ.அருணகிரி, ப.பன்னீர்செல்வம், பேரவை செயலாளர் நா.தனசேகரன், தொலைத் தொடர்பு தொ.மு.ச. தலைவர் செல்லபாண்டியன், பேரவை செயற்குழு உறுப்பினர் எல்.பி.எப். அமல்ராஜ், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் இணை செயலாளர் ஆவடி ராஜ்குமார் ஆகியோர் மலர்தூவி வணங்கினர்.

### உணவுப் பாதுகாப்பு – ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான

# கூட்டு முயற்சி அவசியம் குறித்து ஒன்றிய அரசு கருத்தில் கொண்டுள்ளதா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக.14–

மழைக்கால கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள திமுக எம்.பி. இரா.கிரிராஜன், ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரிடம், பயிர் ஊட்டச்சத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும், நிலையான வேளாண்மையில் அதன் முக்கியத்துவத்தையும் ஒன்றிய அரசு அறிந்துள்ளதா? பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான புதுமையான நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்தும், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கூட்டு முயற்சிகளின் அவசியம் குறித்தும் துறைசார் வல்லுநர்கள், மாநில அரசுகள், விவசாயிகள் கூட்டமைப்புகளுடன் ஒன்றிய அரசு கலந்துரையாடியுள்ளதா என்ற கேள்விகளை எழுப்பியிருந்தார்.



இவற்றுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் துறை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌஹான், மத்திய அரசு பயிர் ஊட்டச்சத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், நிலையான வேளாண்மையில் அதன் முக்கியத்துவத்தையும் ஆராய்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார். அமில மண்ணில் சுண்ணாம்பு இடுதல், சோடியம் நிறைந்த மண்ணில் ஜிப்சம் இடுதல், குறைந்த மண் கரிம கார்பன் உள்ள மண்ணில் கரிமப் பொருட்களை இடுதல் போன்ற, பயிர் ஊட்டச்சத்தை மேம்படுத்தும் பல மண் ஆரோக்கிய மேம்பாட்டு நடைமுறைகளை இந்திய வேளாண் ஆராயச்சி கவுன்சில் (ICAR) பரிந்துரைத்துள்ளது என்றும் அவரது பதிலில் தெரிவித்துள்ளார்.

இயற்கை வேளாண்மை மற்றும் கரிம வேளாண்மை போன்ற இயற்கை சார்ந்த தீர்வுகள் உருவாக்கப்பட்டு செயல்விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன; களத்திலேயே துல்லியமான உரப் பரிந்துரைக்கான eFARMS போன்ற, உரப் பரிந்துரைக்கான அலைபேசி அடிப்படையிலான செயலி உருவாக்கப்பட்டு, அதற்கும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது; ICAR, வேளாண் மண்ணின் நுண்ணூட்டச்சத்து மதிப்பீடு மற்றும் வரைபடமாக்கலை மேற்கொண்டு, மறைமுகப் பசியைப் போக்கவும், பயிர் உற்பத்தித்திறன் மற்றும் ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்தவும், நிலையான மற்றும் கால நிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய வேளாண் உற்பத்தியை ஆதரிக்கவும், பயிர் மற்றும் பிராந்தியத்திற்கேற்ற நுண்ணூட்டச்சத்து பரிந்துரைகளை உருவாக்கியுள்ளது என திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

மண் பரிசோதனை பயிர் விளைவு (STCR) அடிப்படையிலான பொது உரப் பரிந்துரைகளின் (GFR) ஆதரவுடன், இரசாயன உரங்களை அங்கக உரங்கள், பயிர்க் கழிவுகள், பசுந்தாள் உரங்கள் மற்றும் உயிர் உரங்களுடன் இணைக்கும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும், உரப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக, குறிப்பிட்ட இடத்திற்கான ஊட்டச்சத்து மேலாண்மை, உணரி மற்றும் முடிவெடுக்கும் ஆதரவு அடிப்படையிலான உரப் பரிந்துரைகள், 14 வேளாண்சூழலியல் மண்டலங்களில் உள்ள 50 பயிர்களுக்கான சொட்டுநீர் பாசன உர அட்டவணைகள், மற்றும் நீர் வளர்ப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட சாகுபடிக்கான ஊட்டச்சத்து மேலாண்மை நெறிமுறைகள் உள்ளிட்ட துல்லியமான ஊட்டச்சத்து மேலாண்மை தொழில்நுட்பங்களையும் ICAR உருவாக்கியுள்ளது என்றும், கூடுதலாக, மண் ஆரோக்கியம், தாவர ஊட்டச்சத்து மற்றும் நிலையான வேளாண்மையை மேம்படுத்த உதவுகின்றன என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உள்ள புதுமையான நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து, விஞ்ஞானிகள், துறைசார் வல்லுநர்கள், மாநில வேளாண்மைத் துறை அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் பிற பங்குதாரர்களை உள்ளடக்கிய பல அடுக்குக் கலந்துரையாடல்களை ஒன்றிய அரசாங்கம் நடத்துவதாகவும் அமைச்சர் பதிலளித்துள்ளார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) கீழ் இயங்கும் தேசிய வேளாண் ஆராய்ச்சி அமைப்பு (NARS), நாடு முழுவதும் உள்ள தனது 73 ICAR நிறுவனங்கள் மற்றும் 52 மத்திய/மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் மூலம் 300 பயிர்களில் மேம்படுத்தப்பட்ட இரகங்கள், புதுமையான வேளாண் நடைமுறைகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள், ஒவ்வொரு மாநிலத்திலும் மண்டல வாரியாக ICAR நிறுவனங்கள், மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில வேளாண் துறை ஆகியவற்றுக்கு இடையேயான கலந்துரையாடல்களில் விவாதிக்கப்பட்டு, வேளாண் துறையால் நடத்தப்படும் மாநில அளவிலான தகவமைப்புச் சோதனைகளில் கிடைக்கும் செயல்திறனின் அடிப்படையில் அந்தந்த மண்டலத்தின் நடைமுறைத் தொகுப்பில் சேர்க்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ராபி மற்றும் காரிஃப் பருவங்களுக்கு முன்பு, தொழில்நுட்ப இடைவெளிகள் குறித்த பின்னூட்டங்களின் அடிப்படையில் ICAR மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை ஆகியவை கலந்துரையாடல் கூட்டங்களை விரிவாக நடத்துகின்றன.

ஒவ்வொரு பயிர் பருவத்திற்கும் முன்பு, வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தால் தேசிய அளவிலான வேளாண் மாநாடு மற்றும் ராபி/காரிஃப் பிரச்சாரங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்றும், அதற்கு துறையின் அமைச்சர் தலைமை தாங்குகிறார் என்றும், அதில், மாநிலங்களின் வேளாண்மை அமைச்சர்கள் மற்றும் மாநில வேளாண்மைத் துறையின் செயலாளர் நிலை அதிகாரிகள் கலந்துகொள்கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. 11 வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனங்கள் (ATARI), மாநில அரசுடன் இணைந்து தனது 731 வேளாண் அறிவியல் மையங்கள் (KVKs) மூலம் விவசாயிகளுக்குப் பல்வேறு தொழில்நுட்பங்களைப் பரப்புகின்றன.


தொழில்நுட்பங்கள் மற்றும் குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, விக்சித் கிருஷி சங்கல்ப் அபியான் மற்றும் கேத் பச்சாவ் அபியான் போன்ற தேவை அடிப்படையிலான திட்டங்களும் நடத்தப்படுகின்றன என பதிலில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 2014–2025–ஆம் ஆண்டுகளில், 1,574 தானியங்கள், 444 எண்ணெய் வித்துக்கள், 473 பயறு வகைகள், 207 தீவனப் பயிர்கள், 408 நார் பயிர்கள், 96 கரும்பு மற்றும் 34 இதர பயிர்கள் ஆகியவை என மொத்தம் 3,236 வயல் பயிர் இரகங்கள் வெளியிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், இவற்றில் 2,995 இரகங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயிரியல்/ உயிரற்ற காரணிகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தாங்கும் திறன் கொண்டவை என்றும், 587 இரகங்கள் வறட்சி, வெப்பம், வெள்ளம்/ நீரில் மூழ்குதல், உப்புத்தன்மை/ காரத்தன்மை மற்றும் குளிர்/ பனி போன்ற கடுமையான வானிலை நிலைகளைத் தாங்கும் திறன் கொண்டவை என்றும் அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளாக, அரசாங்கம் ICAR மூலமாக ஊட்டச்சத்து நிறைந்த பயிர்களையும் இரகங்களையும் உருவாக்குவதில் மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும், ஊட்டச்சத்துக் குறைபாடு எனும் சவாலை எதிர்கொள்ளும் வகையில், உணவு தானியங்களின் ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்திய 204 உயிர்ச்சத்து செறிவூட்டப்பட்ட வயல் மற்றும் தோட்டக்கலைப் பயிர் இரகங்களை ICAR உருவாக்கியுள்ளதாகவும் திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.தட்சிணாமூர்த்தி
### ஆகஸ்ட் 14 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு 1968ஆம் ஆண்டு உறுப்பினராகி பணியாற்றியவர்.

சீரணி தொண்டராக பணியாற்ற தொடங்கி, தொண்டர் படையிலும், பின்னர் எழும்பூர் பகுதி பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் சேமிப்பு கடனுதவி சங்க இயக்குராக இருந்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தில்

# வீடு கட்டிய 1 லட்சம் பேருக்கு பணம் வழங்காமல் இழுத்தடிப்பு!

## கந்துவட்டி, நிதி நெருக்கடியால் இல்லங்களை விற்கும் பரிதாபம்!

தென்காசி, ஆக. 14–

தமிழ்நாடு ஊரக பகுதிகளில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடு கட்டும் பணி ஆணை பெற்று வீடுகள் கட்டிய சுமார் 1 லட்சம் பயனாளிகளுக்கு இன்னும் பணம் வழங்கப்படாத அவலம் தொடர்கிறது. இதனால் கந்து வட்டிக்கு பணம் வாங்கி நிதி நெருக்கடியில் தவிக்கும் பலரும் வீடுகளை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கிராமப்புறங்களில் வீடுகள் இல்லாத ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் வகையில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மூலம் ஆண்டுக்கு ஒரு லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை கடந்த திமுக ஆட்சியில் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் 2024 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் 2030ஆம் ஆண்டிற்குள் குடிசைகள் இல்லாத தமிழ்நாடுத்தை உருவாக்குவதுடன், ஆண்டுக்கு ஒரு லட்சம் வீடுகளுக்கு குறையாமல் 6 ஆண்டுகளில் மொத்தம் 8 லட்சம் வீடுகள் கட்டுதற்காக திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். ஆனால் சொந்தமாக இடம் வைத்திருக்க வேண்டும். சொந்தமாக வேறு வீடுகள் இருக்கக் கூடாது. சொந்த வீடு இருந்து இடியும் நிலையில் இருந்தால் அவர்களும் இத்திட்டத்தில் பயன் பெறலாம். இலவச வீட்டு மனைப் பட்டா பெற்றவர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியானவர்கள். கிராமப்புறங்களில் ஊராட்சி மூலம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் அடங்கிய குழுவினரால் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தகுதியான பயனாளிகள் பட்டியல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் தயாரிக்கப்பட்டு கிராம சபைகளில் ஒப்புதல் பெறப்படும். பின்னர் அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டன. அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்ட பிறகு வீடு கட்டும் பணிகளை துவக்கலாம். சமையலறை உட்பட குறைந்தது 360 சதுர அடியில் வீடு கட்ட வேண்டும். இதற்காக அஸ்திவாரம், மேற்கூரை மற்றும் பணிகள் முடிவு ஆகிய 3 நிலைகளில் பணம் பயனாளிகளுக்கு விடுவிக்கப்படும்.

அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு மூன்று லட்சத்து 55 ஆயிரத்து 600 ரூபாய் வழங்கப்படும் இதில் 320 கிலோ கம்பி, 140 சிமெண்ட் மூடைகள் ஆகியவை சலுகை விலையில் அரசே வழங்கி விடும். அதிகபட்ச தொகையில் 100 நாள் வேலை உறுதித்திட்டத்தில்




பயன் அடையும் பயனாளிகள் தங்களுக்கான வீடு கட்டும் பணியில் ஈடுபட்ட போதும் 100 நாள் வேலை உறுதித்திட்ட சம்பளத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தத் திட்டம் 2024 – 25, 2025 – 26 என கடந்த 2 ஆண்டுகள் எந்த பிரச்னையும் இன்றி செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 2 லட்சம் வீடுகள் கட்டி வழங்கப்பட்டன. கடந்த பிப்ரவரி மாதம் வரை இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வந்த நிலையில், இந்த நிதியாண்டிற்காக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு கடந்த 6 மாதங்களாக அதாவது சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பின்னர் இன்று வரை பணம் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படுகிறது. பொருளாதார வசதி இல்லாத நெருக்கடி மிகுந்த குடும்பங்களே இதில் பயன் பெறுகின்றனர். தற்போது பணம் வழங்கப்படாத காரணத்தால் பாதிவரை கட்டப்பட்ட கட்டிடப் பணிகளை தொடரவும் முடியாமல் ஏற்கனவே கட்டுமானப் பணிக்கு வாங்கிய பொருட்கள், கூலி உள்ளிட்டவற்றை கொடுக்கவும் முடியாமல் அவர்கள் திண்டாடி வருகின்றனர். மாநிலம் முழுவதும் இதே நிலை தான் நீடிக்கிறது.

2026–27ம் ஆண்டுக்கான பயனாளிகள் சட்டமன்ற தேர்தல் பணிகளை கருத்தில் கொண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேயே தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்வாறாக வீடு ஒதுக்கீட்டு ஆணை பெற்ற சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். பணம் எப்போது வரும் என்று கேட்டு நாள்தோறும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளை நோக்கி பயனாளிகள் படையெடுத்து வருகின்றனர்.

அவர்களுக்கு பதில் சொல்வதே உள்ளாட்சி அலுவலர்களுக்கு மிகப்பெரும் பணியாக உள்ளது. பணம் பட்டுவாடா ஆகாத காரணத்தால் இத்திட்டத்தின் மீதான நம்பிக்கை குறித்த மிகப்பெரும் கேள்விக்குறியை பயனாளிகள் மத்தியில் ஏற்படுத்தி உள்ளது. வட்டிக்கு வாங்கிய பலரும் வட்டி கட்ட முடியாத நிலையில் பகுதியாகக் கட்டப்பட்ட வீடுகளை விலை பேசி வருகின்றனர். பல இடங்களில் கந்து வட்டிக்கு பணம் வாங்கி அவர்களிடமே வீடுகளை இழக்கும் நிலையும் உள்ளது.

**பெயர் மட்டுமே ‘மாற்றம்’**

தமிழ்நாட்டில் முன்னாள் முதல்வர் கலைஞரால் தான் முதன் முதலில் தமிழ்நாட்டில் வீடு கட்டும் திட்டம் 2010ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது இந்த திட்டத்திற்கு கலைஞர் வீடு வழங்கும் திட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது சுருக்கமாக கேவிவிபி என்று அழைக்கப்பட்டது. பின்னர் அது ஜெயலலிதா ஆட்சி காலத்தில் முதலமைச்சரின் பசுமை வீடு திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பின்னர், மு.க.ஸ்டாலின் முதல்வராக பதவியேற்ற பின்னர் கலைஞரின் கனவு இல்லம் என்று பெயர் மாற்றம் செய்து ஆண்டுக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என அறிவித்து அரசு ஆணை வெளியிட்டு அதற்கான நிதியையும் உரிய நேரத்தில் ஒதுக்கீடு செய்தார். 2 ஆண்டுகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் தற்போது வெற்றி வீடு கட்டும் திட்டம் என்று அரசால் பெயர் மாற்றம் செய்துள்ளது. அதே நேரத்தில் திட்டத்தின் பயன் மக்களுக்கு கிடைக்காத நிலை உள்ளது.

**பயனாளிகள் எண்ணிக்கை குறைப்பு**

முந்தைய திமுக ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது ஒரு லட்சம் பயனாளிகளை தேர்வு செய்து அவர்களுக்கு வீடு கட்ட நிதி வழங்கப்பட்டு வந்தது தற்போதைய பட்ஜெட்டில் இத்திட்டத்தின் பெயரை மாற்றியவுடன் ஒரு லட்சம் பயனாளிகள் என்பதை 70 ஆயிரமாக குறைத்துள்ளனர். அதாவது 30 ஆயிரம் பயனாளிகளை குறைத்துள்ளனர். அதே சமயம் வழங்கப்படும் தொகையை அதிகபட்சம் ரூ.5 லட்சமாக உயர்த்தி உள்ளனர்.

மேலும் இத்திட்டத்தின் வழிமுறைகள் குறித்து விரிவான கையேடு வெளியிடப்படவில்லை. இதனால் அதிகாரிகள் இத்திட்டம் குறித்து பயனாளிகளுக்கு எந்தவித கருத்தும் தெரிவிக்க முடியாத நிலை உள்ளது. அத்துடன் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நிதி விடுவிப்பு குறித்த தெளிவும் இன்னும் வழங்கப்படவில்லை. இதனால் இத்திட்டம் கடந்த சில மாதங்களாக முடங்கிய நிலையில் உள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**நன்றி: தினகரன்**
**நாள்: 13.08.2026**

### தென்காசி மாவட்டத்தில்

# செயற்கை தடகள ஓடுதளம் அமைக்க ஒன்றிய அமைச்சரிடம் கோரிக்கை மனு!

## நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் வழங்கி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக.14 -

தென்காசி மாவட்டத்தில் செயற்கை தடகள ஓடுதளம் (Synthetic Athletic Track) அமைக்க ஒன்றிய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரிடம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் கோரிக்கை மனு அளித்துள்ளார்.

டெல்லி நாடாளுமன்ற கூட்டத்தொடரில் அன்று (12.08.2026) மாலை ஒன்றிய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர்.மன்சுக் மாண்டவியாவிடம் கேலோ இந்தியா’ (Khelo India) திட்டத்தின் கீழ் தென்காசி மாவட்டத்தில் செயற்கை தடகள ஓடுதளம் (Synthetic Athletic Track) அமைக்க வேண்டுமென தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் கோரிக்கை மனுவை வழங்கி வலியுறுத்தினார். அதற்கு ஒன்றிய அமைச்சர் கண்டிப்பாக மனுவை பரிசீலனை செய்து கோரிக்கையை நிறைவேற்றிட நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.



அந்த கோரிக்கை மனுவின் விபரம் வருமாறு :-

தென்காசி மாவட்டம் தடகள விளையாட்டுகளில் ஒரு முக்கிய மையமாக உருவெடுத்துள்ளது; 100க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் தொடர்ந்து இம்மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றனர். சமீபத்தில், தென்காசியைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர் ஒருவர் தேசிய தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றது, இம்மாவட்டத்தின் அபார விளையாட்டுத் திறனைப் பறைசாற்றுகிறது. தற்போது செயற்கை தடகள ஓடுதளத்தில் பயிற்சி பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள் சுமார் 60 கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதனால், குறிப்பாக கிராமப்புற மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பின்னணி யைக் கொண்ட மாணவர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கணிசமான நிதி மற்றும் உடல் ரீதியான சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தென்காசியில் சுமார் 400 விளையாட்டுப் பயிற்சி மையங்கள் மற்றும் பயிற்சிப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன; இது வலுவான விளையாட்டுச் சூழலையும், நவீன தடகள உள்கட்டமைப்பிற்கான பெரும் தேவையையும் வெளிப்படுத்துகிறது. எனவே ‘கேலோ இந்தியா’ திட்டத்தின் கீழ் தென்காசியில் 400 மீட்டர் செயற்கை தடகள ஓடுதளம் மற்றும் அதனுடன் தொடர்புடைய களப் போட்டிகளுக்கான (field events) உள்கட்டமைப்புகளை அமைக்க அனுமதிக்குமாறு அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய வசதி உலகத்தரம் வாய்ந்த பயிற்சி உள்கட்டமைப்பை வழங்குவதோடு, விளையாட்டு வீரர்களின் பயணச் சுமையைக் குறைக்கவும், இளைஞர்கள், பெண்கள் மற்றும் பள்ளி மாணவர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், மாநில, தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளுக்கான திறமையாளர்களை முறையாகக் கண்டறிந்து வளர்க்கவும் உதவும்.

இம்முன்மொழிவிற்கு முன்னுரிமை அளித்து, தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்,

இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.





சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் பகுதி எரிமலை பி.எல்.பாலசுப்பிரமணியம் ஏற்பாட்டில் முன்னாள் கழக துணை பொதுச்செயலாளர் – முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சற்குணபாண்டியன் 10ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மலரஞ்சலி செலுத்தி 200 நபர்களுக்கு கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், ஆகியோர் நலஉதவிகள் வழங்கினர்.உடன் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், என்.மருதுகணேஷ், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.ஜேந்திரன், நா.கோதண்டன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.